**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.827/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **நானியார்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(30.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சம்பக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய செய்து வருகிறேன். கடந்த 17.03.2017ம் தேதி காலை 9.20 மணிக்கு சம்பக்குளத்தில் இருந்து மல்லிகை பூ கொண்டு மாட்டுத்தாவணிக்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனது சித்தப்பா பையன் பவுன்ராஜ் அவரது சி.டி 100 இருசக்கர வாகனத்தில் தோட்டத்தில் இருந்து புல் அறுத்துக் கொண்டு சம்பக்குளத்தில் இருந்து பரம்புபட்டியை நோக்கி ரிங்ரோடு பைபாஸ் ரோட்டில் போய் கொண்டிருந்தார். நான் பின்னாடி வந்து கொண்டிருந்தேன். பின்பு எனக்கு முன்னாடி சென்று கொண்டிருந்த மேற்படி பவுன்ராஜ் அவரது பைக்கிலிருந்து கீழே விழுந்து ரோட்டின் நடுபகுதியில் விழுந்து கிடந்தார். அப்போது ஒரு வழிச்சாலையாக இருந்தது. அப்போது அங்கு தனியார் பேருந்து ஓரமாக நின்று கொண்டிருந்தது. அதற்குள் பவுன்ராஜின் அம்மா அப்பா வந்துவிட்டார்கள். பின்பு நாங்கள் அனைவரும் ஆம்புலன்சில் மேற்படி பவுன்ராஜை ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றோம். போகும் வழியிலேயே பவுன்ராஜ்

இறந்துவிட்டார். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.827/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : ஆறுமுகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(30.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சம்பக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தன்று நான் பரம்புபட்டியில் குடியிருந்து வந்தேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 17.03.2017ம் தேதி காலை நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. திருப்பரங்குன்றம் கோவிலுக்கு போய்விட்டு ஊருக்கு திரும்பும் போது மதியம் 11.30 மணியளவில் சம்பவம் பற்றி கேள்விபட்டேன். வழக்கில் இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை